©
தமிழ்நாடு அரசு
2023

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 1.60 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 8] சென்னை, புதன்கிழமை, பிப்ரவரி 22, 2023
மாசி 10, சுபகிருது, திருவள்ளுவர் ஆண்டு–2054

## பகுதி IV—பிரிவு 2 இன் இணைப்பு

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது 2023 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 9 ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:–

**சட்ட எண். 1/2023.**

**1982 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழகச் சட்டத்தினை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் எழுபத்தி மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2022 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழக (திருத்த)ச் சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 9/1982.

6 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. (இதன்பின்பு இதில், முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1982 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழகச் சட்டத்தின் 6 ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவில், (a) கூறில் “காது கேளாதவர் – வாய் பேசாதவர் அல்லது தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்'' எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

39 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

3. முதன்மைச் சட்டத்தின் 39 ஆம் பிரிவில், (2) ஆம் உட்பிரிவில், “அல்லது காது கேளாதவர் – வாய் பேசாதவர் அல்லது தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்'' எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. கோபி ரவிகுமார்**,
*அரசுச் செயலாளர் (சட்டமியற்றல்),*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**வெ. அரசகுமார்**,
*உதவி இயக்குநர்,*
*சட்ட (தமிழ்ப்பிரிவு)த் துறை.*